உ

சிவமயம்



சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்

சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் தம்பித்துரை நடராஜா

அவர்கள் சிவபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

**27-12-2005**

உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ



சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்

சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# தம்பித்துரை நடராஜா

அவர்கள்

சிவபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

27-12-2005

# சமர்ப்பணம்

உயிர்தந்து உறவாகி பொழுதெல்லாம்

தன்னுயிர் வருத்தி

எம் உயர்வு நோக்கியே....

வாழ்வுயர்ந்து நாம் சிறக்க

மனதுருகி மகிழ்ந்தீரே!

தினமும் பாதம் தலைபணியும்!

தந்தையே!

சந்ததியே உம்நாமம்

வணங்கும்! வணங்கும்!

உமை நினைந்து

நினைந்து!

– பிள்ளைகள் –

உ

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ.



**மண்ணில்** **விண்ணில்**

**19-01-1936** **28-11-2005**

# அமரர் தம்பித்துரை நடராஜா

***திதி நிர்ணய வெண்பா***

*சீர்மேவு பார்த்திப வருடந்தனில் சோபனஞ்சேர்*
*கிருத்திகை அபரபக்க துவாதசித் திதியில்*
*கார்மேவு நடராஜா குஞ்சித பாதன் கழல்*
*வாருற்றார் - அவர் புகழ் பாடு*

உ

சிவமயம்





## பஞ்சபுராணம்

### தோத்திரப் பாமாலை

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்
உடன் தோன்றினராய்
மூன்றாய உலகம் படைத்துகந்தான்
மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன்
திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்
அடியோங்களுக்கே.

### திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே
- கொண்டிடலையோ
இனிறோர் இடையூறெனக்குண்டோ எண்டோள் முக்கள்
- எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே.

### திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவிழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகமும் கழற உளறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தெனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம



# அமரர்

# திரு தம்பித்துரை நடராஜா

# அவர்களின்

# வாழ்க்கைச் சுருக்கம்

ஈழத்திருநாட்டின் சிரமென மிளிரும் யாழ் நகரிலே செல்வம் செழிக்கும் பூமியாம் சாவகச்சேரியில் விஸ்வ கோத்திர பதியாம் சங்கத்தானையில் வாழ்ந்த அமரர் தம்பித்துரை சின்னம்மா தம்பதியினருக்கு பிள்ளைகளாகத் தோன்றிய வர்களே சரஸ்வதி, கணேசன், நடராஜா, லீலாவதி, திருநாவுக்கரசு, சபாரத்தினம், மங்கயற்கரசி ஆவார்.

இவர்களுள் அமரர் நடராஜா 1936ம் ஆண்டு தை மாதம் 19ம் நாள் இப்பூமியில் அவதரித்து தனது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்று வந்த இவர், பின்னர் இளம் பராயத்திலேயே நாச்சிமார் கோவிலடியில் தனது குலத்தொழிலான பொற்றொழிலை சிறப்புறக்கற்று தனது விடா முயற்சியும் கடின உழைப்பும் கொண்டு K.K.S வீதியில் சாயி நகைத் தொழிலகத்தை உருவாக்கி நடாத்தி வந்தார்.

இந்நிலையில் இவர் பெற்றோரும், உற்றாரும் உவப்ப சங்கானையைச் சேர்ந்த சின்னையா சிவஞானம் தம்பதிகளின் 2வது புத்திரியான இராஜேஸ்வரியைக் கரம் பற்றினார். இவரின் மனைமாட்சியின் நன்கலமான மக்கட்பேறாக கிடைத்த செல்வங்களே சுபசாயினி (மனிதவள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், வலிமேற்குப் பிரதேச சபை) அருள்வாணி, டர்சினி (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை விஞ்ஞானப் பிரிவு 2006) ஆகியோர்.

தெய்வ பக்தியில் சிறந்து விளங்கிய இவர் வண்ணை ஸ்ரீ காமாட்சி, நல்லூர்க் கந்தன் ஆகியோர் மீது அளவற்ற பக்தி கொண்டதுடன் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் மீது கொண்டுள்ள பெரும் பக்தி காரணமாக பல தடவைகளுக்கு மேல் புட்டபர்த்திக்குச் சென்று பகவானைத் தரிசித்ததுடன் அங்குள்ள திருத்தலங்களையும் தனது துணைவி, பிள்ளைகளுடன் சேவித்து அருள் பெற்றார். அத்துடன் ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவனத்தின் அங்கத்தவராக பல வருடங்கள் திறம்பட சேவையாற்றி வந்தார்.

தொழில் வளத்தை மெருகேற்றும் பொருட்டு சிங்கப்பூர், இந்தியா போன்ற வெளிநாடுகள் சென்று வந்து அனைவரது அன்பையும், நன்மதிப்பையும் பெற்று சிறப்புற வாழ்ந்து வரும் காலத்தில் துணைவியரது மறைவு பேரிழப்பாக அன்னாரைப் பாதித்த போதும் பிள்ளைகளை இனிதே வழிகாட்டி வரும் காலத்தில் பகவானின் தவிர்க்க முடியாத அழைப்புக் காரணமாக இவ்வுலக வாழ்வை சோமாவாரக் கார்த்திகைத் திங்கள் நன்னாளில் நீத்து இறைபதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப் போமாக.....

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

ஓம் சாய்ராம்

**- குடும்பத்தினர் -**

**தேற்றம்**

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தில் - வேண்டா
நமக்குமது வழியே நாம் போமளவும்
எமக் கென்னென் திட்டுண்டிரும் - **ஔவையார் -**

ஓம்

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி

# பஜனைப் பாடல்கள்

ஜய் ஜய் ஜய் கணபதி தேவா (2)
மாதா பார்வதி பிதா மஹா தேவா (2)
கஜானனா கஜானனா
கஜானனா ஹே கணபதி தேவா

குரு தேவா சரணம் தேவா
பாஹி ப்ரவோ சரணம் தேவா
சுந்தர ரூபா பறீ சாயி தேவா
சரணம் சரணம் சத்குரு தேவா

சிவ சிவ சம்போ தாண்டவ ப்ரியகரா
பவ பவ பைரவ பவானி சங்கர
ஹர ஹர பம்பம் போலோ மஹேஸ்வர
டம டம டமரு நடன மனோஹர
சத்யம் சிவம் சாயி சுந்தர

ஜெய் ஜெய் பவானி அம்பே பவானி மா
அம்பே பவானி மா சாயி பவானி மா
சிர்டி பவானி மா பர்த்தி பவானி மா
ஆத்ம நிவாசி மா சாயி பவானி மா

சரவண சிவகுமாரா சண்முக நாதா ஜய் ஜய்
சுப்ரமண்ஜ கார்த்திகேயா கதிர் வேலா
சண்முக நாதா ஜய் ஜய் சண்முக நாதா
சரணம் சரணம் சண்முக நாதா

அயோத்ய வாசி ராம் ராம் ராம்
தசரத நந்தன ராம்
பதித பாவனஜானகி ஜீவன
சீதா மோஹண ராம்

கோவிந்த கிருஷ்ண ஜய்
கோபால கிருஷ்ண ஜய்
கோபால பால பால ராதே கிருஷ்ண ஜய்
கிருஷ்ண ஜய் கிருஷ்ண ஜய் கிருஷ்ண ஜய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜய்
ராம கிருஷ்ண ஜய் ராதே கிருஷ்ண ஜய்
பாலா கிருஷ்ண ஜய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜய்
கோபிக மால ஹேறி பியாரி
மாயி மீரா மன வி ஹாரி
மதன மோகன முரளி தாரி கிருஷ்ண ஜய்
கிருஷ்ண ஜய் கிருஷ்ண ஜய் கிருஷ்ண ஜய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜய்
சாயி ஜய் சாயி சத்ய சாயி ஜய்

ஓ பாபா சாயி பாபா
தி நோக்கே புட்ட பர்த்தி பாபா (ஓ பாபா)
ராமகி பாபா விஷ்ணுகி பாபா
சபுக்கே கே நாராயண பாபா

சாயீசா தரிசனம் தர நீ வா வா
கதி நீ அல்லால் எனக்கார் துணை ஜயா
கலியில் அவதரித்த கருணைக்கடலே
எளியோனைக் காப்பதுன் பாரமல்லவோ ஜயா
அன்னையும் ஜயனும் அனைத்தும் நீயே

**சாயி காயத்திரி மந்திரம்**

ஓம் பறீ சத்ய சாயி தேவாய சித்மஹே
பர்த்தி நாதாய தி மஹி
தந்தோ சாயி பரசோதயாத்

# விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துலகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெஞ் ஞான
அற்புத னீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னையாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்

யறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடையில் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய வசபை
எண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
சாலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூர்க்கமும்
எண்முக மாகஇனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக் கருளி

என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்

எல்லை இல்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

# திருவெம்பாவை

*திருச்சிற்றம்பலம்*

*1)* ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டெயும் வாள்தடங்கண் மாதே
வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்

*2)* பாசம் பரஞ் சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்கு
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆடேலோ ரெம்பாவாய்.

*3)* முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரேழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துங் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்த டியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
ஏத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

*4)* ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

5) மாலறியா நான் முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

6)மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கும் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

7)அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னா என் னாமுன்னம் தீசேர் மெழு கெப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன் நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

8)கோழி சிலப்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ் சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமே வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல் வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலே ரெம்பாவாய்.

9) முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாழ் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலாமேலோ ரெம்பாவாய்.

10)பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேத முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன் தன் கோயிற் பிணாப்பிள்ளை கான்
ஏதவனூர் ஏதன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

11)மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துங் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்தோங்காண் ஆரழல் போற்
செய்யா வெண் ணீறாடி செல்வா சிறு மருங்குல்
மையார் தடங்கன் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

12)ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

13)பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பொற்பாதம்
அங்கங் குருகினத்தால் மின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்க
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.

14)காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
ஆதி திறம் பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளத்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடெலோ ரெம்பாவாய்.

15)ஓரொருக்கால் எம்பெருமான் என்னென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களி கூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொரகால் வந்தனையால் விண்ணோரை தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தான்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்த் தாடேலோ ரெம்பாவாய்

16)முன்னிக் கடலைச் சுருக்கியெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்ன பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்

17)செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலகா
கொங்குண் கருங்குழலி நந்தெம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

18)அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ ற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர் வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப் பூம் புனல் பாய்த் தாடேலோ ரெம்பாவாய்.

19)உன் கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுங்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப் போங்கேள்
எங்கொங்கை நின்னைபர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக் கெங்கோன் நல்குதியேல்
எங் கெழிலேன் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

20)போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண் டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.


## விநாயகரின் பதினாறு திருநாமங்களும் விளக்கமும்

1. ஓம் சுமுகாய நம
மங்கள முகம் வாய்ந்த சுமுகன்
2. ஓம் ஏகதந்தாய நம
ஒற்றைக் கொம்பை உடைய ஏகதந்தனை
3. ஓம் கபிலாய நம
கபில நிறம் வாய்ந்த கபிலன்
4. ஓம் கஜகானாய நம
யானைக் காதுகள் உள்ள கஜகர்ணன்
5. ஓம் லம்போதராய நம
பெருத்த வயிற்றோடு கூடிய லம்போதரன்
6. ஓம் விகடாய நம
குள்ளத் தோற்றமுள்ள விகடன்
7. ஓம் விக்னராஜாய நம
சகல விக்னங்களுக்கும் ராஜாவான விக்னராஜன்
8. ஓம் விநாயகாய நம
துஷ்ட செயல்களையும், இடையூறுகளையும் நீக்குவதில் வல்லவரான விநாயகன்
9. ஓம் தூமகேதுவே நம
நெருப்பைப்போல் ஒளி வீசி திகழ்பவராக தூம கேது
10. ஓம் கணாச்சாய நம
பூதகணங்களுக்கு தலைவராக விளங்கும் கணாத்சயன்
11. ஓம் பாலசந்திராய நம
நெற்றியில் பிறைச்சந்திரனை சூடியவரான பாலச்சந்திரன்
12. ஓம் கஜானனாய நம
யானை முகத்தை உடைய கஜானனன்
13. ஓம் வக்ரதுண்டாய நம
வளைந்த துதிக்கரமுடைய வக்ரதுண்டன்
14. ஓம் சூர்ப்காணாய நம
முறம் போன்ற அகலமான காதுகளையுடைய சூர்ப்பகர்ணன்
15. ஓம் ஹேரம்பாய நம
தம்மை வணங்கி நிற்கும் பக்தகோடிகட்கு அருள் புரியும் ஹேரம்பன்
16. ஓம் ஸ்கந்தபூர்வயாய நம
கந்தப் பெருமானின் தமையனான ஸ்கந்தபூர்வயன்

# நாடுகளின் தலைநகரமும் பண அலகுகளும்

| நாடுகள் | தலைநகரம் | பணஅலகு |
| --- | --- | --- |
| அமெரிக்கா | வாஷிங்டன் | டொலர் |
| அவுஸ்ரேலியா | கான்பெரா | டொலர் |
| இலங்கை | ஸ்ரீஜெயவர்த்தனபுர | ரூபா |
| இந்தியா | புதுடெல்லி | ரூபா |
| இத்தாலி | ரோம் | லீரா |
| இந்தோனேசியா | ஜகார்த்தா | ரூபியா |
| ஈரான் | தெகிரான் | றியால் |
| ஈராக் | பக்தாத் | தினார் |
| கனடா | ஒட்டாவா | கனேடியடொலர் |
| கிறீஸ் | எதென்ஸ் | டிசம்மா |
| சவூதி அரேபியா | றியாத் | றியால் |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் | டொலர் |
| சீனா | பீக்கிங் | ஜென் |
| சுவீடன் | ஸடாக்ஹோம் | குரோனர் |
| தாய்லாந்து | பாங்கொக் | பாக் |
| தென்னாபிரிக்கா | கேப்டவுண் | ராண்ட் |
| நியூசிலாந்து | வெலிங்டன் | நியூசிலாட் டொலர் |
| நேபாளம் | கத்மண்டு | நேபாள ரூப்பீஸ் |
| நைஜீறியா | அபுஜா | நைரா |
| நோர்வே | ஒஸ்லோ | குரோனர் |
| பர்மா | ரங்கூன் | கயித் |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | ரூபா |
| பிரான்ஸ் | பரிஸ் | யூரோ |
| பிரித்தானியா | இலண்டன் | ஸ்ரேலிங்பவுண் |
| பிலிப்பைன்ஸ் | மணிலா | பெஸோ |
| பூட்டான் | திம்பு | ரகுல்ட்ராம் |
| போர்த்துக்கல் | லிப்பன் | எஸ்குடா |
| மலேசியா | கோலாலம்பூர் | சிங்கிட் |
| மாலைதீவு | மாலே | ரூஃபியா |
| மெக்சிக்கோ | மெக்சிக்கோ | பெஸோ |
| யப்பான் | டோக்கியோ | ஜென் |
| வங்களாதேசம் | டாக்கா | வங்காளியர் |
| ஜேர்மனி | பேர்ன் | யூரோ |

# வம்சா வழி


தம்பித்துரை
+
சின்னம்மா
சரஸ்வதி
+
துரைசிங்கம்
ஜெயபரசிங்கம்
ஜெயபூபதி
ஜெயசேகரசிங்கம்
ஜெயராசசிங்கம்
ஜெயரஞ்சிதம்
கணேசன்
+
நவமணி
சசிகலா
சசிரேகா
நடராஜா
+
இராஜேஸ்வரி
சுபசாயினி
அருள்வாணி
டர்சினி
லீலாவதி
+
இரத்தினம்
சபாரத்தினம்
+
சரஸ்வதிதேவி
சிந்துரா
திருநாவுக்கரசு
மங்கையற்கரசி
+
விநாயகமூர்த்தி

# நன்றி நவில்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர்

திரு.தம்பித்துரை நடராஜா அவர்களின்

மரணச்செய்தி கேட்டு உடன் வந்து

உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில்

கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும்,

தொலைபேசி மூலம், ஆறுதல் கூறிய அனைவருக்கும்,

இன்னும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும்,

எங்கள் அழைப்பை ஏற்று வீட்டுக்கிருத்திய

நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றிகள்

**இங்ஙனம்**

**குடும்பத்தினர்.**

*75, பிரதான வீதி,*

*சங்கானை.*

*27-12-2005*

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

ஆர்.எஸ் பிரின்டேர்ஸ் சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்.